உ


குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சுபானு௵ ஆடி௴ — AUGUST 1943.



இவ்வாதீனத்துக்குச் சொந்தமான

திருக்கற்குடி கோவிலின் முன்தோற்றம்.

அலையார் தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமரும்
கலையார் மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார் வாணுதலாள் நல்லசிங்கடி யப்பனுரை
விலையார் மாலைவல்லார் வியன்மூவுல காள்பவரே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
[redacted]மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சிந்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சுபானு ஆடி மீ AUGUST 1943 | இதழ் 9 |
|---|---|---|



இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஓடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. சிவாகம சீலம் — 295

2. தலைவன்றுளிற் றலைப்பட்ட நங்கை —
வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
அவர்கள், தமிழாசிரியர், தஞ்சை. 300

3. உலகெலாம் —
வயிநாகரம், "பாலகவி" திரு. வே. இராமநாதன் செட்டியார்
அவர்கள், தேவகோட்டை. 304

4. சைவத்திருமுறைகள் —
வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், கார்ப்பொரேஷன் உயர்தரப்பள்ளி,
சென்னை. 308

5. கழற்சிங்க நாயனுர் —
வித்துவான், திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை
அவர்கள், B. O. L. சென்னை. 312

6. Tiruvenkadu Temple —
Sri. P. Sambantham Pillai, M. A.,
Govt. College, Kumbakonam. 316

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

## சிவாகமசீலம்

(234-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, சங்கற்பமாவது தான் செய்யும் நற் செயலிலே கருத்தைப் பதித்து எண்ணுதலாம். பெறுதற்கரிய மனிதப்பிறப்பின் உயர்வையும், அப் பிறப்போடு உலகில் வாழுங் காலத்தின் சிறுமையையும், காலநீட்சியின் பெருமையையும் சிந்தித்து நற்காலம் வாய்த்தபோதே நல்வினையைச் செய்யாதுவிடின் அக் காலவாழ்வு வீணே கழியுமென்றெண்ணித் தவறாது செய்தலிற் கருத்து வைத்தலே சங்கற்பத்தின் கருத் தாம். "இன்ன காலத்திலே இன்ன இடத்திலே இன்ன நோக்கமாக இது செய்யப் புகுகின்றேன்" என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்தாம்.

### சங்கற்ப முறை

ஆண்கள் வலது கையிலே தருப்பை, பூ, அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு

வலது கையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து இடதுபெருவிரலை வலது பெருவிரலா லமர்த்தி வலது முழந்தாளில் வைக்க. பெண்கள் இடதுமுழந்தாளில் வைக்க.

எந்த நற் கருமத்திலும் முதலில் சிவ சிவ எனச் சொல்லிக்கொள்ளல் வேண்டும். அங்ஙனஞ் சொல்லுதலால் தீவினை யெல்லாம் நீங்கும். நல்வினைப்பயன் யாவும் கைகூடும்.

அது,

"சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்"

என்னுந் திருமந்திரத்தானு மறிக.

**सकृदमनस्क सङ्कीर्तनेनापि दुरितनिकर भञ्जनार्थं, "अपिवा यश्चाण्डालः शिवइतिवाचंवदेत्तेन सह संवदेत्तेन सहसंवसेत्तेनसह भुञ्जीत"** (முண்டகம் 3, 2, 9)

**यद्यक्षरं नाम गिरेरितं नृणां सकृत्प्रसङ्गावघमाशुहन्तितत् ॥**

"ஒருமுறை மனத்தோடன்றி யுரைப்பினும் தீவினைத் தொகுதி அழிவுறற் பொருட்டாம்", "சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடி னவனொடு கலந்து பேசுக. * * *".

"ஈரெழுத்து மொழியாகிய சிவ எனும் பெயர் ஒருகாற்கூறப் படினும் அது தீவினை முழுதுந் தீர்த்திடும் விரைந்தே"

எனச் சிவதத்துவ விவேகத்துக் கூறுதலும் காண்க. சிவன் எனுஞ் சொற்குப் பல்வேறு பொருள்கள் உளவேனும் முற்றுணர்வும் முழுமுதன்மையும் ஆகிய சிவத்துவமுடைமை பற்றியும், தூயதன்மையுடைமை பற்றியும் முதல்வன் சிவன் எனப்படுவன் என்பது,

शान्तत्वात्सर्वैकर्तृत्व भावात्परम कारणात् ।
शिव उक्तो महातन्त्रे तन्त्रविद्भिस्सदाशिवः ।
शिवत्वमतिशुद्धंस्यात् ।

*"சாந்த முடைமையாலும், சர்வகர்த்திருத்துவத் தன்மையாலும், பரம காரணமாதலாலும் சதாசிவன் சிவன் என ஆகமங்களிற் கூறப்படுவர்"*

எனவும்,

*'சிவத்துவம் மிக்க தூய்மையாம்'*

எனவும் வரும் ஆகம வாக்கியங்களான் அறியப்படும். இங்ஙனமாகலின் சிவசிவ என்னும் அடுக்குமொழியைச் சங்கற்ப வாக்கியங்களின் முதற்கண் வைத்து வழங்கல் மரபாயிற்று.

இனிச் சங்கற்ப வாக்கியத்தின் பொருளாவது "உயிர்கட்கு இன்பமாக்குபவராகிய சிவபெருமானது ஆணையின்படி நடப்பவராகிய ஆதிக்கண் தோன்றிய பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்திலே, சுவேத வராக கற்பத்திலே, வைவசுவத மனுவின் காலத்திலே, இருபத்தெட்டாவது சதுர்யுகத்தின் கலியுக முதற் பகுதியிலே, நாவலந்தீவின் பகுதியாய பாரத வருடத்திலுள்ள பரதகண்டத்திலே, மாமேருமலையின் தென் பக்கத்திலே இங்கே நிகழ்ந்து வழங்கிவரும் பிரபவ முதலிய அறுபது ஆண்டுகளினுள்ளே இதுபோது நிகழும் இன்ன ஆண்டில், இன்ன அயனத்தில், இன்ன பருவத்தில், இன்ன மாசத்தில், இன்ன பக்கத்தில், இன்ன இன்ன திதி வார நக்ஷத்திரத்தில் இன்னயோக இன்னகரண இன்ன விசேஷ குணத்தோடு கூடிய இந்தப்புண்ணிய தினத்தில், இன்ன நோக்கமாக இன்னகிரியை செய்யப் புகுகிறேன்" என்பதாம்.

உயிர்கட்கு இன்பமாக்கலின் சிவபெருமான் சம்பு எனப்படுவர். அது,

"இன்பஞ் செய்தலிற் சங்கர னெம்பிரான்
இன்ப மாக்கலிற் சம்பு விடும்பை நோய்
என்ப தோட்டு மியல்பி னுருத்திரன்
என்பரால்"

என்னும் காஞ்சிப்புராணத் திருவிருத்தத்தால் அறியப் படும்.

**यो ब्रह्माणं विदधातिपूर्वं योवैवेदां श्च प्रहिणोति तस्मै।**
**योऽग्रेमां विदधेपूर्वं ज्ञानञ्च प्रहितिमे।**
**यत्प्रसादान्मया प्राप्तं प्राजापत्यमिदंपदम्**

"எவன் ஆதிக்கண் பிரமனைப் படைத்தானோ? எவன் அவனுக்கு வேதங்களை விரித்துரைத்தானோ?" "எந்தச்சிவன் என்னை ஆதியில் படைத்தானோ? ஞானத்தை (வேதங்களை) எனக்கு உரைத்தருளினனோ? அவனருளால் இந்த பிரமலோகபதவி என்னால் பெறப் பட்டது" என்னும் சுருதிபுராண வசனங்களால் சம்புவின் அருளால் பிரமா முதற்றோன்றி அவனது ஆணையின்வழி நடப்பவன் என்பது பெறப்படும். '**ஆதிக்கணுன்** முகத்தி லொன்று சென்று" என்ற திருத்தாண்டகப் பகுதியும் இதனை வலியுறுத்தும்.

பரமசிவன் உலகங்களைப் படைத்துக் காக்கும் எல்லைக்குள் அளவிறந்த பிரம விட்டுணுக்கள் பிறந் திறப்பர் என்பது,

"நூறு கோடி பிரமர்க ணொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே,,

எனவும்,

"எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமுன் னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்"

என்னுந் திருமுறைப் பாடல்களானு மறியப்படும். அங்ஙனமாய அவரெல்லாமொடுங்கிய மகாசங்கார காலத்தின் பின் மீள உலகங்களைப் படைப்புழி முதலிற்றோன்றிய பிரமாவே இப்போதுள்ள பிரமர் ஆதலின் அப்பிரமன் ஆத்தியப்பிரமன் எனப்படுவன். ஆத்தியன் = ஆதியிற்றோன்றியவன். அப்பிரமனது ஆயுளாகிய நூறு ஆண்டுக்குப் பரம் என்று பெயர் அப்பரத்தின் முற்பாதி பிரதம பரார்த்தம் எனவும், பிற்பாதி துவிதீய பரார்த்தம் எனவும் பெயர் பெறும். பரார்த்தம்=பரத்தின்பாதி.

இனிப் பிரமாவின் ஆயுளினளவை வருமாறு:-

60 நாழிகை-ஒருநாள், 15 நாள்-ஒருபக்கம், 30 நாள்-ஒருமாதம், 6 மாதம்-ஒரு அயனம், 2 அயனம்-ஒரு ஆண்டு, 1728000 ஆண்டு-ஒரு கிருதயுகம், 1296000 ஆண்டு-ஒரு திரேதாயுகம். 894000 ஆண்டு-ஒரு துவாபரயுகம், 432000 ஆண்டு-ஒரு கலியுகம்.

4320000 ஆண்டு-ஒரு சதுர்யுகம், 71 சதுர்யுகம்-ஒரு மன்வந்தரம், 14 மன்வந்தரம்-ஒருகற்பம் அது பிரமாவுக்கு ஒரு பகலாகிய 1000 சதுர்யுகம். 2 கற்பம்-ஒரு பிரமதினம், 360 பிரமதினம்-ஒருபிரம வருஷம், 50 பிரமவருஷம்-ஒரு பரார்த்தம், 100 பிரமவருஷம்-ஒரு பிரமகாலம்.

இப்போது நடைபெறுவது இரண்டாவது பரார்த்தத்தில் ஒரு சுவேதவராக கற்பத்தில் ஏழாவதாகிய வைவசுவத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தின் கலியுகத்தின் முற்பகுதியில் சுபானு வருடம். இக்காலவளவைகளால் பிரமன் முதலிய இறைவர்பதங்களின் வாழ்வாரின் வாழ்க்கைக் காலத்தின் பெருக்கமும், மக்கள் வாழ்நாளின் சுருக்கமும் இனிது விளங்கும். இதனை யறிந்து மனிதயாக்கையொடு வாழுங் காலத்திலேயே நல்வினைகளை ஈட்டிக்கொள்ளல் வேண்டுமென்பதைத் தெரித்துணர்த்துவன சங்கற்பவாக்கியங்கள் என்றவாறும். (வரும்)

உ

சிவமயம்

# தலைவன்றுளிற் றலைப்பட்ட நங்கை

[ வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், தஞ்சை ]

நம் கருத்துள் தோன்றி நம் கண் முன்னே ஒரு சித்திரப்பாவை நிற்கின்றாள். உருவும் திருவும் உவமிக்க வொண்ணாதாள் அவள். அந் நங்கை ஒப்பாரு மிக்காரு மில்லாத ஓவியப்பாவை. அவள் மங்கைப் பருவத்து நங்கை. உம்மைப் புண்ணிய மிகுதியால் ஒப்பாரு மிக்காரு மில்லாத ஓர் உத்தமத் தலைவன் பெயரைக் காதாற் கேட்டாள். கேட்ட அந் நொடிப்பொழுதுமுதல் அல்லும் பகலும் அனவரதமும் அப் பெயரையே சிந்திக்கத் தொடங்கினாள். சிந்தனை பெரிதாயிற்று. அவள் கேட்ட அப்பெரும் பெயரே அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. நின்றாலும் கிடந்தாலும் இருந்தாலும் எத் தொழிலைச் செய்தாலும் அப்பெயரை மறந்திலள். கரும்பும் அவளுக்கு வேம்பாயிற்று; அமுதமும் நஞ்சாயிற்று; பாலுங் கைத்தது. உணவு ஒரு சிறிதும் வேண்டிலள். விரும்பி உடுப்பனவும் உடாளாயினள். அயிலுதலன்றித் துயிலுதலையுங் கொள்ளாள். அவளைக் கண்டோர் பேய்கோட் பட்டாளோ வென்பார். அவளுக் குற்றதென் என்பார்சிலர். வெறியாட்டுச்செய்து வேலனை வினவுவோ மென்பார்சிலர். அவர் பேச்செல்லாம் அவள் செவிக்கேறில. பைத்தியம் பிடித்தவள் போலாயினாள் அப்பைந்தொடி நங்கை. ஐயிரண்டு திங்களாய் அங்க மெலாம் நொந்து பெற்ற அன்னையையும் வேண்டிலள். ஊட்டுத்தாயையும் மறந்தாள். வளர்ப்புத் தாயையும் விரும்பிலள். தோழியர் குழுவுடன் சென்று ஆடுதலையும் விட்டாள். பாடுதலையும் மறந்தாள். தனித் திருத்தலிலேயே விருப்புற்றாள். தோழியர் குழுவை வெறுத்துத் தனித்திருக்கும் தலைமகளை உயிர்த்தோழி

அணுகினாள். மெலிவுக்குற்ற காரணம் யாதென்றாள் தோழி. ஒன்றுமின்றென மறைத்தாள் தலைவி. உயிர்த் தோழிக் குரையாது ஒளிக்குஞ் செய்தியு முண்டுகொல் என்றாள் அவள். செய்தியொன் றுண்டாயினன்றோ மறைத்தல் உளதெனப் பின்னும் மறுத்தாள் இவள். கண்ணொன்றைக் காண்கின்றது; கருத்தொன்றை நாடுகின்றது; வெற்றுரையே நம்முட னிவ ளாடுகின்றாள் என வெறுத்தவள்போ லிருந்தாள் உயிர்த்தோழி. தலைவி கருத்து முன்கேட்ட அவ்வொன்றையே கருதுவதாயிற்று. வெளிக்குத் தோழியுடன் பேசினளே யன்றி உள்ளத்து வேறொன்றை யுள்ளினளவள். தோழியுடன் உசாவுங் காலத்தும் அவள் முன்னங் கேட்ட அப் பெயரையே மறவாமல் நினைந்து நினைந்து உருகுதல் செய்தாள். கண்ணீரருவி ஆறாய்க் கடல்போலப்பரந்தது. வாய்சோர்ந்து நவின்ற அப்பெயரை வெளிப்படுத்தினாள். தோழி வியப்புற்றாள். அவனை அஃதென் என்றாள். ஒன்றுமின் றென்று நாணினாள் தலைவி. தோழிபின்னும் பின்னும் வினவினாள். தலைவி தோழியை நோக்கி இப் பெயருடையான் யாவன்? அவன் வண்ணம் யாது? வடிவம் யாது? என்று பெருவிருப்புடன் கேட்டாள். அவள் தோழிக்கு 'சிவனெனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான் அவன்' என்றாள். 'பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீற்றான்', 'சுடர்ப்பவளத் திரு மேனி வெண்ணீற்றான்' என்றாள். 'பாதித் தன் திரு வுருவிற் பெண் கொண்டான்', 'கொக்குலாம் பீலியொடு கொன்றைமாலை குளிர்மதியும் கூரரவும் நீரும்-சென்னித் தொக்குலாம் சடையினன்', 'நெற்றிமே லொற்றைக் கணிறைவித்தான், காரேறு முகிலனைய கண்டத்தான், பெண்ணுருவோ டாணுருவமாயினான்' என்றாள். அவன் வண்ணம் வடிவுகளை யெல்லாம் கேட்ட தலைவி ஒன்றும் மொழியாமல் இதயத் தெழுதிக் கொண்டாள். அப் பெருமான் இயலெல்லாம் என்னிதயத் தெழுதுவித்த அன்புடைத் தோழீ! அப் பெருமான் யாண்டுள்ளான்? எனப் பரபரப்புடன் கேட்டாள் தலைவி.

"கருத்துத்திக் கதநாகங் கையி லேந்திக்
கருவரைபோற் களியானைக் கதறக் கையால்
உரித்தெடுத்துச் சிவந்ததன்றோல் பொருந்த மூடி
உமையவளை யச்சுறுத்தும் ஒளிகொள் மேனித்
திருத்துருத்தி திருப்பழனந் திருநெய்த் தானந்
திருவையா றிடங்கொண்ட செல்வர் இந்நாள்
அரிப்பெருத்த வெள்ளேற்றை அடர வேறி
யப்பனூர் இப்பருவ மாரூ ராரே".

என்றாள் அவ்வுயிர்த் தோழி. அதைக் கேட்ட தலைவி முன்னையினும் பெருவேட்கை யுற்றாள். காணவேணவாக் கொண்டாள்.

"திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறற்
குருமணியைக் குழன்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே"

என்று பலபல சொல்லி அழுதாள்; புரண்டாள்; புலம்பினாள்.

"உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னூரர் மன்னு குன்றைப்
புலிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் தருக்கேன் மின்னே"

என்பன போன்ற பலவற்றைச் சொல்லிச் சொல்லி அரற்றினாள். என் செய்வாள் அவள். சிந்தை அவள் வழிச் செல்லாதாயிற்று. சிந்தை யென்பதொன்றற்றாள். அவசமானாள். பரவசப்பட்டாள். அழுதழுது புலம்பிச் சோர்ந்தாள்.

அப்பெருமான்மேல் வைத்த காதற் பித்து பெரும் பித்தாயிற்று. அப்பொழுதே தாயையும் தந்தையையும் விட்டாள். புறப்பட்டாள். அயலார் கூடினர். ஆங்காங்கே

திரண்டு திரண்டு ஏதேதோ இவளைப்பற்றிப் பழிமொழி கூறினர். பழித்தனர். அவர்களை முகமெடுத்தும் இவள் பார்த்திலள். அவர் கூறும் பழிமொழிகளொன்றும் இவள் காதிற் கேட்டிலள். ஊராரை உவர்த்தாள். அவர் கட்டுப்பாட்டையெல்லாம் வெறுத்தாள். அவள் செல்லுஞ் செலவில் கட்டுப்பாடெல்லாங் கடுந்தூளாயின. தடையெல்லாம் விடை கொண்டன. ஊரார் வாயடங்கினர். மேலும் மேலும் கூறுவதென்? தன்னையே மறந்தாள். தன்பெயரும் தோன்றாதாயினள். தலைவனை யடைந்து தான்வேறு அவன் வேறுஎன யாரும் அறியாதபடி இரண்டறக் கலந்து தோய்ந்து இன்புற்றாள். இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டகத்து வைத்துணர்க.

“ முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே”

இருவினையொப்பு மலபரிபாகம் வந்த ஆன்மாவே இங்குக் கூறிய நங்கை, ஆன்மநாயகி. தலைவன்–உயிர்த்தலைவன், சிவபிரான். தாள் + தலை = தாடலை என்ற புணர்ச்சி போன்றதே இரண்டறக் கலத்தலாகிய முத்தி என்பர். கேட்டல் தலையன்பு. காணல் இடையன்பு. கூடியபின் அன்புகொளல் கடையன்பு. கேட்டவுடன் கொண்ட தலையன்பே இவ்வன்பு. தாள் என்பது அருள். இத்திருத் தாண்டகத்தில் வைத்த பொருள்நுணுக்கங்களையெல்லாம் சேக்கிழார்பெருமான் அருளிய பெரிய புராணத்துக் கண்ணப்ப நாயனார் புராணத்து வைத்து ஆராய்ந்தறிக.

**குறிப்பு:–** தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருவையாற்று ஸ்ரீ ஐயாறப்பர் ஐந்தாந் திருவிழாக்காலத்து (14—4—43) நடந்த விரிவுரையின் சுருக்கம்.

உ

குருபாதம்

# உலகெலாம்

[ "பாலகவி" திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள். ]

(284-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி "அலகில் சோதியன்" என்றது இறைவனது மலமற்ற உயர்ந்த நிலையைக் குறிக்கும். அநாதியே மலத்தொடர்பு அற்றவன் ஆகலினன்றோ "அநாதி மல முத்தன்" என்ற பெயர் அவனுக்கு உரியதாயிருக்கின்றது. மலம் இருளென்றும், இறைவன் ஒளியென்றும் ஆன்றோர் கூறுவர். ஒளி இரண்டு வகைப்படும். ஒன்று அகக் கண்ணுக்குப் புலப்படுவது. மற்றொன்று புறக்கண்ணுக்குப் புலப்படுவது. கதிர், மதி முதலியவற்றி னொளியும், அவ்வொளிக்கு முன்னர் நிற்கும் இருளும் புறக்கண்ணுக்குப் புலப்படுவன. மெய்ஞ்ஞானமாகிய ஒளியும், அஞ்ஞானமாகிய இருளும் அகக் கண்ணுக்குப் புலப்படுவன. இவ் வான்மபோத ஒளியல்லாது, இவற்றைக் கடந்த பரஞ்சோதியாகிய சிவஞானச் சோதியே ஈண்டுக் குறிக்கப்பெற்றது.

உயிர்கள் மலத்தொடு கூடியவழி இருளாயும், இறைவனொடு கூடியவழி ஒளியாயும் இருப்பன. எனவே பதியொடு கூடிய ஆன்மாக்கள் ஒளி பெறுவன வாதலின், அவ்வான்மாக்களுக்கு ஒளியினைத் தருகின்ற பேரொளிப் பிழம்பாகத் தானிருப்பதோடு; ஒளிபெற்ற ஆன்மாக்கள் பெறாத பிற உயிர்களுக்கு அதனைத் தருகின்ற ஆற்றல் வாய்க்கா திருப்பத் தானொருவனே எல்லோர்க்கும் ஒளி தருகின்றவனாகவும் இறைவன் விளங்குகின்றான். இதனை விளக்கவே, "அலகில் சோதியன்" என்று ஆசிரியர் கூறினார். சிவமாந்

தன்மைப் பெருவாழ்வாகிய தனது பேரொளியை எத்தனை உயிர்களுக்கு வழங்கினும் குறைவுபடாத ஒளிப்பிழம்பு என்பது இதனாற் புலப்படுகின்றது.

"மலர்தலை யுலகின் மல்கிரு ளகல, விலகொளி பரப்பி யாவையும் விளக்கும், பரிதியி னொருதானாகி*" என்பதில் கதிரொளியை இறையொளிக்கு உவமித் திருப்பது காணத்தக்கது.

உணர்ந்தோதற் கரிய ஒருவன், அடைந்தோர்ப் புரக்கும் அருங்குணம் உடையனாக-ஒளிப் பிழம்பாக அம்பலத்து ஆடுகின்றானென்று கண்டோம். ஐந் தொழில் செய்யும் அவனுக்கு வடிவம் இன்றியமையாத தாதலின், அவ்வடிவம் எவ்வாறிருக்கும் என்பதுபற்றிச் சிவஞான சித்தியார்,

"அருவமோ வுருவா ரூப மானதோ வன்றி நின்ற
வுருவமோ வுரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னி
னருவமு முருவா ரூப மானது மன்றி நின்ற
வுருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ள வாமே"

என்று கூறுகின்றது. இங்குக் கூறப்பெற்ற அருவம், உருவம், அருவுருவமென்ற மூன்று வடிவங்களையும் சேக்கிழார் முதன் மூன்றடிகளிற் காட்டுகின்றார்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" என்ற விடத்து மக்களது பசுஞான, பாசஞானங்களானறியப் படாத அருவத்திருமேனி குறிக்கப் பெறுகின்றது. "நிலவு உலாவிய நீர்மலி வேணியன்" என்ற விடத்து சடை முதலிய உறுப்புக்களை யுடைமை புலப்படுத்தி உருவத் திருமேனி குறிக்கப் பெறுகின்றது. "அலகில் சோதியன்" என்ற விடத்து அவயவப் பகுப்பின்மை

---

* நன்னூல் சிறப்புப்பாயிரம்.

யாகிய அருவமும், புலப்படுகின்ற ஒளியாகிய உருவமும் காட்டி அருவுருவத் திருமேனி குறிக்கப் பெறுகின்றது. ஆன்மாக்களின் பக்குவ நிலைக்குத் தக, இவற்றில் ஓர் உருக்கொண்டு வந்து இறைவன் அருள்செய்வன் என்பது சைவ சித்தாந்த முடிபாகும்.

இனி, "மலர் சிலம்படி" என்பதில், திருவடிகளுக்குக் கூறிய அடைமொழிகள் இரண்டு. மலரடி என்பது "மலர்போன்ற திருவடிகள்" என்னும் பொருள் குறிப்பதோடு, வினைத் தொகையாய் மலர்ந்த—மலர்கின்ற—மலரும் திருவடிகள் என்னும் பொருளையும் தருகின்றது. "நீலமேனி வாலிழை பாகத், தொருவ னிருதா ணிழற்கீழ், மூவகை யுலகு முகிழ்த்தன முறையே†" என்றபடி உலகத் தோற்றத்திற்குக் காரணமாகிய திருவடிகளாதலின், வினைத்தொகைப்பொருள் மிகப் பொருந்துவதாகும். "அடியார்களது உள்ளக் கமலத்துப் பொருந்தும் அடி" என்றும் பொருள் கொள்ளலாம். "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தே அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேர்வான்" என்பது பரிமேலழகர் கண்ட உண்மை.

ஆனந்தக் கூத்தன் அணிந்துள்ள சிலம்பு மறைச் சிலம்பு. அதனை அணிந்தாடுங் குறிப்பு, உயிர்களைத் தனது திருவடிப்பேறு பெறுதற்கு அழைத்தலாகும். எனவே, மலர் என்பதைச் சிலம்புக்கு அடையாக்கி, "ஓசையைச் செய்கின்ற" என்று பொருள் கொண்டு உலக மக்களை அழைக்குங் குறிப்பையும் உணரலாம்.

"வாழ்த்தி வணங்குவாம்" என்பதில் ஆதியந்தம் அற்ற பரம்பொருளுக்கு வணக்கம் கூறலே இயைபுடையதா யிருக்க, வாழ்த்தும் கூறப் பெறுகின்றது. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்ற

† ஐங்குறுநூறு.

படி நாம்வாழ இறைவனை வாழ்த்தல் வேண்டும். " அவனன்றி யோரணுவும் அசையாது " என்பது பழமொழி. ஆடியிற் றோன்றும் உருவத்தில் அணிகலன்கள் காணப்பெறவேண்டுமேல், அவ்வுருவுடையார் அவற்றையணிந்து ஆடி முன்னர் நிற்றல் வேண்டுமன்றோ? அதுபோல ஆண்டவனை வாழ்த்தினால் ஆன்மாக்கள் வாழ்வர்.

இனி, இந்நான்காமடியால் இறைவனது பேரானந்தப் பெருவாழ்வு பெறுதற்குரிய நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றையும் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார். வணக்கம் சரியையையும், வாழ்த்து கிரியையும், சிலம்பு யோகத்திற்கு உறுதுணை ஆயினமையின் யோகத்தையும், மலரடி ஞானத்தையும் விளக்குதல் காணலாம். சிலம்போசை யோகத்திற்கு உறுதுணை என்பதை,

> " திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
> நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
> நேர்பட வங்கேநின் றுந்தீபற "

என்பதால் அறியலாம். ஞானத்தின் பயன் திருவடி அடைதலாதலின் மலரடி ஞானத்தை விளக்கிநின்றது.

---

> காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
> வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
> றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
> வீங்கிருளே போலும் மிடறு.

—காரைக்காலம்மையார்.

உ

சிவமயம்

# சைவத் திருமுறைகள்

[வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் அவர்கள், சென்னை.]

(288-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமுறைகள் நமக்கு உணர்த்துவன

திருமுறைகளில், சைவ சித்தாந்த சமயத்திலுள்ள பதி, பசு, பாசம் பற்றிய சிறந்த கொள்கைகள் அனைத்துங் கூறப்பட்டுள்ளன. அப்பர் சுவாமிகள் **பசுபதி திருவிருத்தம்** என்றே ஒரு பதிகம் அருளியுள்ளார். அப்பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களின் இறுதியிலும் "எம்மை ஆளும் பசு பதியே!" என இறைவனை விளித்துள்ளமையால், இறைவனாகிய பதி, உயிர்களாகிய பசுவை ஆட்கொண்டருளுவார் என்பதும், மற்றும் திருவையாற்றுத் திருவிருத்தத்தின் முதற்பாடலில்,

"சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறன் அடித்தலமே"

என மொழிந்திருப்பதிலிருந்து, பசு பதியான சிவபெருமான், தம்மைச் சார்ந்த பசுக்களாகிய உயிர்களைப் பந்தித்துநின்ற பழவினைகளாம் பந்த பாசத்தைப் போக்கித் தமது திருவடிப் பேரின்பவீட்டை நல்குவாரென்பதும் விளங்காநிற்கும். இம் முப்பொருள்களின் இயல்புகளெல்லாம் திருமுறைகளில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. மற்றும் இயற்கை வனப்பு, இசை நுட்பம், மக்கள்நிலை, நாட்டின்நிலை, பழக்க வழக்கங்கள், சரித்திரச் சான்றுகள் முதலியனவும் திருமுறைகளில் காணப்படுகின்றன.

மேலும், அத்திருமுறைகள் நமக்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறியைப் பின்பற்றி இறைவனடிப் பேரின்பத்தை யடையும் வழிகாட்டுகின்றன. இவைகளை முறையே வடநூலார் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சக மார்க்கம், ஞானமார்க்கம் எனக் கூறுவர். இவைகளுள் **தாசமார்க்கத்தைத்** தமிழில் **ஆண்டானடிமை முறை** யெனவும், **சற்புத்திர மார்க்கத்தை மகன் தந்தை** முறையெனவும், **சகமார்க்கத்தைத் தோழன் முறை** யெனவும், **ஞானமார்க்கத்தைத் தலைவன் தலைவி** முறையெனவுங் கூறுவர். இந்நான்கு நெறிகளையும் உலகிடையே விளக்க வந்தவர்கள் முறையே திருநாவுக் கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரரும், மாணிக்க வாசகரும் ஆவார்கள். இந்நால்வர் பாடல்களும் சிறப் பாக அந்நான்கு நெறிகளையே பின்பற்றியன.

சிவபெருமானைத் தந்தையாகக்கொண்ட திருஞான சம்பந்தர், மகன் தந்தையிடம் உறவாடுவது போலவே பலவிடங்களில் பேசியுள்ளார். திருவீழிமிழலையில் சிவ பெருமான் அளித்த படிக்காசுக்கு வட்டம் கேட்கப் பட்டபோது ஆளுடைய பிள்ளையார் மிழலை நாதரிடம் "வாசிதீரவே காசு நல்குவீர், மாசின் மிழலையீர் ஏச லில்லையே" என்று உரிமையுடன் கேட்கிறார். திருவா வடுதுறையில் தம்மையீன்ற தந்தையாகிய சிவபாத விருதயர் யாகஞ் செய்யப் பொருள் கேட்டபோது, தம்மை ஆட்கொண்டு ஞானப்பால் ஊட்டிய ஞானத் தந்தையாகிய சிவபெருமானிடம் பொன் வேண்டி, "இடரினுந் தளரினும்" எனப் பதிகம் தொடங்கி அதில் "இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன் றெமக்கில்லை யேல், அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே" என அதிகாரத்துடன் வினவி உலவாப் பொற்கிழி பெற்றார். கோளறு பதிகத்தின் இறுதிப் பாடலில்,

**"ஆனசொன்மாலையோது மடியார்கள்வானில்**
**அரசாள்வர்ஆணை நமதே"**

என்று பாடிக் "கோளறு பதிகத்தை ஓதுவார் விண்ணரசராய் விற்றிருந்தாள்வர்; ஆணை நமது" எனக் கம்பீரமாகக் கட்டளை யிட்டுள்ளார். தந்தைக்குள்ள அதிகாரத்தை மகன் திருவருள் வழிநின்று செலுத்துகின்றாரென்பதை இதனாலறியலாம்.

அப்பர்சுவாமிகள் "ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு" எனவும், "........... கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே" எனவும்,

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே"

எனவும், தம் அடிமைத் திறத்தினையும் ஆண்டான் கடமையினையும் விளக்கியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் "எம்பிரான் தோழனுமாய்" எனவும், "...முத்தாரம் இலங்குமிளிர் மணிவயிரக் கோவை அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும், கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும், கடல் நாகைக் கா ரோ ண ம் மேவியிருந்தீரே" எனவும், "காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்" எனவும், "இவரலா தில்லையோ பிரானார்" எனவும், "அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்! வாழ்ந்து போதீரே" எனவும், "பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கை வைத்தாய், மாதர் நல்லார் வருத்தம் அது நீயும் அறிதியன்றே" எனவும் இறைவனை ஒரு தோழன் போல் நினைத்துப் பலவாறு நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளார்கள்.

மாணிக்கவாசகர் "...... கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என்றும், "ஏரார் இளங்கிளியே! எங்கள் பெருந்துறைக்கோன் சீரார் திருநாமம்

தேர்ந்துரையாய்'' எனவும் இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடல் அருளியுள்ளார். திருக்கோவையார் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் வைத்துப் பேரின்பப்பொருள்படப் பாடியதாக அறிஞர் கூறுவர். சிலர் இறைவனைத் தலைவியாகவும் தன்னைத் தலைவனாகவும் கொண்டுள்ளார் எனவுங் கூறுவர்.

இங்ஙனமாகத் திருமுறைகளருளிய ஆசிரியன்மார்கள் இறைவனை அடைதற்குரிய நான்கு நெறிகளைத் தாம் பெற்ற அனுபவவாயிலாக நம்மனோர் உய்ய விளக்கிப் போந்ததன்றி, அருட்செம் பாடல்கள் மூலமாக நமக்கு உய்யும் நெறிகளை உபதேசித்துச் சென்றிருக்கின்றார்கள்.

அப்பர் பெருமான் இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளென்றும், மனித்தப் பிறவி பெற்ற தன்பயன் அம்பலக் கூத்தனின் இனித்த முடைய எடுத்த பொற்பாதத்தைக் காண்டலே என்றும், அப்பெருமான் என்றுவந்தாய் என்னுந் திருக்குறிப்போடு ஆன்மாக்களுக் கருள்புரியக் காத்துக் கொண்டிருக்கிறாரென்றும், அப்பனிநன் பொற்கழல் ஈசன் எனுங்கனி ஏசற்றவர்கட்குச் சாலவும் இனிது என்றும் உபதேசித்துள்ளார். மேலும் உண்மை யுணராமல் சாத்திரமும், கோத்திரமும், குலமும் பேசித் திரிபவர்களைப் பார்த்து சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள்!

"கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் ளருளுமாற் பேறரே''

என்று முடிவாக மக்கட் போலிகளைப் பார்த்து உபதேசித்துள்ளார். ஆகவே மக்கட்பிறவி யெடுத்ததன் பயன் சார்ந்தார்க்குத் தண்ணிழலாய் வேண்டுவன நல்கும் இறைவன் இணையடிகளை யடைந்து பேரின்பம் மெய்துவதே திருமுறை ஓதுவதனலாய பயனென்றறிக.

(தொடரும்)

உ

குருபாதம்

# கூற்றுவ நாயனார்

[ வித்துவான், திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள், B. O. L. ]

## தமிழகம்

தமிழகத்திற்கே புதியராய **பல்லவர்** கி. பி. 250-ல் காஞ்சியைக் கைப்பற்றி ஆளலாயினர். அவரால் நெருக்குண்ட **களப்பிரர்** அதேகாலத்தில் சோணாட்டையும் பிறகு பாண்டிய நாட்டையுங் கைப்பற்றி ஆளலாயினர். ஏறத் தாழக் கி. பி. 575-ல் சோணாடு களப்பிரர் ஆட்சியினின்றும் பல்லவர் கைக்கு மாறியது. அதேகாலத்தில் பாண்டிநாடும் களப்பிரர் கையினின்றும் பாண்டியர் கைக்குமாறியது. பாண்டியநாடு பாண்டியர் கைக்கு மாறினாற்போலச் சோணாடு சோழர் கைப்படாது பல்லவர் கைப்பட்டது நினைவு கூர்தற்குரியது. சோழர் கி. பி. 250-முதல் ஏறத்தாழக் கி. பி. 875-வரை பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் அடங்கிய சிற்றரசராகவே இருந்துவந்தனர். அப்பொழுது அவர்கள் பழையாறை, ஆரூர், உறையூர் என்னும் ஊர்களைக் கொண்ட சிறிய நிலப் பகுதியை ஆண்டு வந்தனர். இங்ஙனம் சிற்றரசராக வலி இழந்து நின்ற சோழர், பாண்டியர் உதவி நாடிக் கொள்வினை கொடுப்பினை செய்து வந்தனர். இந்நாட்டிற்கே உரிய சோழரைப் பல்லவப் பேரரசரும் கௌரவமாகவே (சிற்றரசு தந்து) நடத்தி வந்தனர் என்னல் தவறாகாது.

## பல்லவர்

பல்லவப் பேரரசு கிருஷ்ணையாறு முதல் தெற்கே காவிரியாறுவரை பரவி இருந்தது. சோணாட்டை அடிப்படுத்திய **சிம்மவிஷ்ணு**பல்லவனது மகனே அப்பரால் மனமாற்றம் பெற்றுச் சிறந்த சிவபக்தனான **மகேந்திர வர்மன்** என்பவன். அவன் காலம் கி. பி. 618-630.

அவனுக்குப்பின் வந்த அரசருள் முதலாம் **பரமேச்சுர வர்மன்** ஒப்புயர்வற்ற சிவபக்தன்; உருத்திராக்கத்தால் சிவலிங்க வடிவமாகச் செய்யப் பெற்ற முடியைத் தரித்துப் பேரரசனக இருந்தவன். சேக்கிழார் பெருமான் குறிக்கும், வடமொழியும் தென்மொழியும் வல்ல **ஐயடிகள் காடவர்கோன்** இவனக இருக்கலாம்; அல்லது முன் சொன்ன மகேந்திரவர்மனகவும் இருக்கலாம். இப் பெரியோன் மகனே பூசலார் காலத்துக் காடவர் கோனை **இராசசிம்மன்** ஆவன். இவனே காஞ்சி கயிலாசநாதர் கோவிலைக் கட்டிய பெரியோன். இவனும் தன் தந்தையைப் போலவே சிறந்த சிவபக்தன் என்பது இவன் கல்வெட்டுகளைக் கொண்டு அறியலாம். இவனுக்குப் பிறகு கி. பி. 710-முதல் 825-வரை இருந்த பல்லவப் பேரரசர் சிறந்த வைணவ பக்தராவர். கி. பி. 525-முதல் 850-வரை ஆண்ட பல்லவப் பேரரசன் (இறுதிப் பல்லவப் பேரரசன்) **மூன்றும் நந்திவர்மன்** என்பவன்.

## இவன் செய்த போர்கள்

இப்பேரரசன் இளவரசனக இருந்த பொழுது பல்லவநாடு இராட்டிரகூடர்க்குத் திறை செலுத்தி வந்தது. அந்த அவமானத்தைப் போக்க நந்திவர்மன் வடக்கு நோக்கிப் படையெடுத்தான்; இராட்டிர கூடப் பேரரசின் தென் பகுதியான பல்லாரிக் கோட்டத்தைக் கைப்பற்றினன்; அங்கிருந்த 'குறுகோடு' என்ற மலைநாட்டை வென்றான். அப்பொழுது இராட்டிர கூட அரசனக இருந்தவன் துறவுள்ளம் கொண்டவனும் சிறந்த சமணபக்தனுமாகிய **அமோகவர்ஷ நிருபதுங்கன்** என்பவன். அவன் நந்திவர்மனுடன் சமாதானம் செய்து கொண்டான்; தன் இரண்டாம் மகளான **சங்கா** என்பவளை மணம்செய்து கொடுத்தான். அவளே நந்திவர்மனது முதல்மனைவி ஆதலால் **பட்டத்தரசி** ஆயினள். இந்த மணமுறையால் பல்லவநாடு சுயேச்சை பெற்றுப்

பெருமை பெற்றது. இப்போரைக் குறிப்பாக உணர்த்துவது இவனது நான்காம் ஆட்சி யாண்டில் வெளிவந்த **வேலூர் பாளையக் கல்வெட்டாகும்.**

இவன் பட்டம்பெற்ற ஆறும் ஆண்டிலிருந்து வெளிவந்த கல்வெட்டுகள் இவனைத் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்று குறிக்கின்றன. தெள்ளாறு என்பது வடஆர்க்காடு கோட்டம், வந்தவாசி தாலூகாவில் உள்ளது. இவன் அவ்விடத்தில் சேர, சோழ, பாண்டியரை முற்றிலும் முறியடித்தான். பின்னவர் மூவருள் பேரரசன் பாண்டியனே ஆவன். அவன் பெயர் **சீமாறன் சீவல்லபன்** என்பது. 'அவன் தன் மகளை நந்திவர்மனுக்கு மணம் செய்து கொடுத்தான்; அவள் பெயர் **மாறம்பாவை** (மாறன் பாவை) என்பது' என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். மாறம்பாவை நந்திவர்மன் மனைவி என்பது கல்வெட்டுக்களால் நன்கு புலனாகும்.

### இந் நந்திவர்மனே கழற்சிங்கன்

இவனைப்பற்றி விரிவாகக் கூறுவது **நந்திக் கலம்பகம்** ஆகும். அதனில் இவனுடைய குண நலங்களும் போர்களும் பிறவும் விளக்கப்பட்டுள. இவன் '**குரை கழல் வீர நந்தி**' எனவும், 'பல்லவர் **கோவரி**' எனவும் பலஇடங்களிற் குறிக்கப்படுகின்றான். இவற்றில் உள்ள **கழல், அரி** (சிங்கம், சிங்கன்) என்பவற்றைக் கூட்டக் '**கழற்சிங்கன்**' என்பது பெறப்படுகிறது. இஃது இவனது சிறப்புப்பெயர்போலும்! நந்திவர்மனென்பது அபிடேகநாமம். இது நிற்க,

### இவனது சிறப்பு

இவனுக்குப் பல விருதுப் பெயர்கள் உள. அவை **அவனி நாரணன், குமார மார்த்தாண்டன்** முதலியன. இவன் இப்பெயர்களால் காவேரிப்பாக்கம், குதிரைச் சேரி, திருவிடை மருதூர், திருநாகேச்சுரம் முதலிய இடங்களில் திருப்பணிகள் செய்துள்ளனர். இவன்

பெயர் கடல்கடந்த சையாம் நாட்டிலும் பரவி இருந்தது. அங்குச் சென்ற பல்லவனாட்டு வணிகன் ஒருவன் 'அவனி நாரணன்' என்ற பெயரால் குளம் ஒன்றை எடுத்தனன் என்று சையாம் கல்வெட்டு ஒன்று (Takuapa Inscription) கூறுகின்றது. இதனால் இப் பேரரசன் காலத்தில் கடல்வாணிபம் செழிப்புற்றிருந்தது என்பதும், இவனது புகழ் கடல்கடந்த நாடுகளிலும் பரவி இருந்தது என்பதும் தெரியக்கிடத்தல் காணலாம். இதனை உளங்கொண்டே போலும் சுந்தரர்,

> " கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
> காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் "

என்று தமது திருத்தொண்டத் தொகையில் இவனைப் பாராட்டியுள்ளார். மேலும் சுந்தரர் இப்பெரியோனது சிவபக்தியிலும் புகழிலும் ஆட்சியிலும் மிக்க ஈடுபாடுடையவர் என்பது,

> "உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும்
> பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே"

என்னும் தேவார அடிகளால் நன்கறியக் கிடத்தல் காண்க.

இதுகாறும் கூறிய செய்திகளால், வரலாற்றுச் சிறப்புடைய மூன்றாம் நந்திவர்மனே காடவர்கோன் கழற்சிங்கன் என்பதும், அவன் சுந்தரர் காலத்தவன் என்பதும், இருவகைப் போர்கள் நடத்தி இராட்டிரகூடன் மகளான சங்காவையும், பாண்டியன் மகளான மாறம்பாவை என்பவளையும் மணந்தவன் என்பதும், 'சிவனை முழுதும் மறவாதசிந்தையன்' என்பதும் நன்கு விளங்குகின்றன அல்லவா ! இவற்றை நினைவு கொண்டு இனிச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ள கழற்சிங்கர் புராணத்தை ஆராய்வோம். (தொடரும்)

# Tiruvenkadu Temple

*(Sri P. S. Pillai, M.A., Govt. College, Kumbakonam.)*

Thiruvenkadu is a village of puranic importance in South India - Tanjore District. It is eight miles south-east of Shiyali Railway Station. It is not far distant from Kaveripoompattinam (of Saint Pattinathar fame) which is on the banks of the Kaveri.

Mention is made of Thiruvenkadu even in the great epic Valmiki Ramayana. The history and legend of the place was written in Sanskrit by Soodha Muniver. And in 1836 Saiva Ellappa Navalar rendered it in Tamil. Of the six places equally important as Kasi (Benares) this place, also called Swetharanyeswara Kshethra, stands first and foremost. It is widely believed that to be born, to live, to worship, and to die in this Kshethra lands one to moksha.

In such a place of pilgrimage is situated the splendid saivite Temple of Sri Swetharanyeswarar. The two characteristic towers (gopurams) -the eastern and the western - keep constantly before the visitors's mind the existence of the spiritual world. All the principal deities of the Hindu Pantheon are found here. The God is Sri Swetharanyeswarar. Goddess is Sri Brahmavidyambal, having a separate shrine of Her own. The God Sri Aghoramurthi is the important deity. The image of this Lord standing with

His Soolam appears to be tall and terrible. The piece of mythology about Him, found below, is interesting and important. On every Sunday the Aghora Pooja is prominent and attracts a large crowd. There is Nataraja Sabha - Tiruvenkadu is also called Adi Chidambaram - where Sri Nataraja is in His Navathandava form.

The novelity about this shrine is the existence of the symbols of Sangu (conch) and Chakra (Discus), thereby showing the Oneness of God. The chief sthala vriksha is the Vadapala tree under which is found the Rudrapadha.

The Mukkula Theertham is the unique feature in Tiruvenkadu Temple. The three theerthams (holy tanks) are found within the prakara walls. The significance of them is stated separately.

The Tamil saints, Tiru Gnanasambander, Appar, and Sundarar visited this shrine and sang devotional hymns in praise of the place and the presiding Lord. It is only here Pattinathar got Grace of God. Indra who is associated with the celestial elephant Airavatham, conducted the Indra Mahotsavam here to Sri Swetharanyeswarar. And even to-day the same festival take place annually in a grand and gracious style in the Tamil month of Masi.

The legend of Aghoramurthi runs as follows. The notorious Asura Marutwasura was causing great havoc to the Devas. At the advice of Maha

Vishnu, the Devas, seized with terror, approached Sri Swetharanyesvarar and begged for help. There upon Sri Swetharanyeswarar directed the Nandigeswarar to over come the mighty Asura. But the Nandi was disfigured in the fight. With one of his five faces, Swetharanyeswarar created Aghoramurthi, a terrible commander, and ordered Him to deal with the wicked Asura. Agoramurthi fought with the demon, defeated, and crushed him under His feet.

It has been said that the Mukkula Theertham deserves special mention. At the request of Parvathi, Paramesvara danced in Tiruvengadu. Three sparks sprang up through His three eyes. They became the three theerthams - the Agni theertham, the Soorya theertham, and the Chandra theertham. It is said that Brahma bathed in the Mukkula theertham and got Grace at the hands of Sivaperuman. Not long ago, Meikanda devar—the gratest authority in the Siva Siddanta philosophy—was born to his karkarthar parents as a result of their holy bath in the Mukkulam. To conclude, Sambandar aptly describes the greatness of the theertham.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே



## கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி ஆலயத்தின் ஈசான்ய பாகத்தில் அக்கினிதேவனால் அமைத்து வழிபாடியற்றப் பெற்ற அக்கினீசுவரர் ஆலயமும் அரசடி விநாயகராலயமும் ஜீர்ணமாக இருந்தபடியால் அவ்வாலயங்கள் திருப்பணி செய்விக்கப்பெற்று 12—7—43 சோமவாரத்தன்று அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

# தருமபுர ஆதீன வெளியீடுகளின்

## விலைப்பட்டி

| | | விலை. | அஞ்சற் செலவு |
|---|---|---|---|
| | | அ. பை. | அ. பை. |
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | 8—0 | 3—0 |
| 40 | சித்தாந்த சைவ வினாவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோயில் வரலாறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக் கோயில் வரலாறு | 2—6 | 0—9 |
| 48 | திருக்கடவூருலா (குறிப்புரையுடன்) | 4—0 | 1—9 |
| 51 | சீகாழித் தலவரலாறு | 2—9 | 0—9 |
| 52 | மெய்கண்ட சாத்திரம் | 8—0 | 3—0 |
| 53 | திருக்கற்குடித் தலவரலாறு | 3—6 | 0—9 |
| 54 | நீதிநெறிவிளக்கம் | 8—0 | 4—3 |
| 55 | திருவாரூர் நான்மணிமாலை | 2—0 | 1—0 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். எல்லோரும் எளிதில் பெற்றுப் படித்துணரவேண்டுமென்ற கருத்தில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவதால் மணியார்டர் மூலமாவது, தபாற்றலைகள் மூலமாவது அஞ்சற்கூலி உள்பட அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முகவரி:— நூல்நிலையப்பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்,
[illegible]ரம் P.O.